## JUDICIAL MAGISTRATE COURT NO.I CHENGALPATTU

## CC No. 88/2017

## DEPOSITION OF WITNESS
## (Chapter XXIII Code of Criminal Procedure)

*****

| | |
|---|---|
| IN THE COURT OF | : JUDICIAL MAGISTRATE NO.I CHENGALPATTU. |
| Deposition of witness for | : PW- 15 |
| Name | : திருமதி. அலமேலுமங்கை தாயார் |
| Father/Husband's Name | : |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 23.01.2024.

A1, A2 present. A3 died.

**முதல் விசாரணை–**

நான் வேலூர் அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்து 2018 ம் வருடம் செப்டம்பர்மாதம் பணி ஓய்வு பெற்றுவேலுரில் வசித்து வருகிறேன். கடந்த 2015 ம் வருடம் காஞ்சிபுரம் குற்ற பிரிவு குற்ற புலனாய்வு ஆய்வாளராக பணிபுரிந்த போது 1ம் எதிரி நடராஜன் தாக்கல் செய்த சென்னை உயர்நீதிமன்ற இரண்டாவது மேல்முறையீடு எண்.479–2012 மற்றும் எம்பி எண்.2–2012, தேதி 17.03.2015 ன்படியும், எங்கள் துறையின் 24.08.2015, 17.08.2015 மற்றும் 31.08.2015 ல் பிறப்பிக்கப்பட்ட ஆணைகளின்படி வழக்கினை மறு பதிவு செய்து புலன் விசாரணை செய்ய உத்தரவு பிறப்பிக்கபட்டதை நான் கோப்பிற்கு எடுத்து கொண்டு புகார்தாரரான தாம்பரம் வட்டாட்சியர் திரு.செல்வராஜ், அவரின் புகாரை பெற்று காஞ்சிபுரம் சிபிசிஐடி

குற்ற எண்.1–2015, பிரிவுகள் 465, 468, 471 உ–இ 120பி இதச யின்படி முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து 08.09.2015 ல் சமூகம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன்.

அதை தொடர்ந்து அன்றைய தினமே பகல் 01.00 மணிக்கு சம்பவயிடம் சென்று சாட்சிகள் நாகராஜன், ராஜேந்திரபாபு ஆகியோர்கள் முன்னிலையில் பார்வை மகசர் தயார் செய்தேன். மேற்படி புகார்தாரர் மற்றும் பார்வை மகசர் சாட்சிகளை விசாரணை செய்து வாக்குமூலங்களை தனிதனியே பதிவு செய்தேன். எனது விசாரணையில் இந்த வழக்கில் சம்மந்தப்பட்ட சொத்திற்கு பட்டா வழங்கிய வட்டாட்சியர் மற்றும் சோழிங்கநல்லூரில் இருந்த நில அளவையர்களுக்கும் எதன் அடிப்படையில் பட்டா வழங்கப்பட்டது என்று விளக்கம் கோரி 09.09.2015, 16.09.2015, 29.09.2015, 05.10.2015, 09.10.2015, 23.10.2015, 02.11.2015, 14.12.2015, 31.12.2015, 25.01.2016 ஆகிய தேதிகளில் கடிதங்கள் அனுப்பினேன். அதை தொடர்ந்து தாம்பரம் சார்பு நீதிமன்றத்தில் 10.02.2016 ல் நடராஜன் தாக்கல் செய்த உயர்நீதிமன்றத்தின் அசல் மனுவை கோரி எனது தரப்பிலிருந்து அது வழக்கிற்கு தேவைப்பட்டதால் கடிதம் மூலம் கொடுக்குமாறு கேட்டு அனுப்பினேன். அதை தொடர்ந்து 17.02.2016 ல் மத்திய குற்றபிரிவு போலிசாருக்கு சென்னை உயர்நீதிமன்றத்தில் அசல் உத்தரவை கொடுக்குமாறு கடிதம் மூலம் கோரினேன். (**அந்த 24.08.2015, 17.08.2015 மற்றும் 31.08.2015 ல் பிறப்பிக்கப்பட்ட ஆணைகள் முறையே அதசாஆ 17, 18, 19 ஆகவும், முதல் தகவல் அறிக்கை அதசாஆ 20, பார்வை மகசர் அதசாஆ 21 ஆக குறியீடு செய்யப்படுகிறது. )**

அதை தொடர்ந்து பட்டியல் சாட்சிகள் 4, 5 மற்றும் சந்திரகுமார், சிகாமணி ஆகியோர்களை விசாரித்து தனிதனியே வாக்குமூலம் பதிவு செய்தேன். அதன் பிறகு 02.03.2016 ல் தாம்பரம் வட்டாட்சியர் அலுவலம் மற்றும் சிட்லபாக்கம் ஆகிய அலுவலகங்களுக்கு 1999 லிருந்து 2002 வரை பணிபுரிந்த துணை வட்டாட்சியர், கிராம நிர்வாக அலுவலர், நில அளவையர் மற்றும் அவர்களின் சுருக்கு கையொப்பம், அதன் சார்புடைய கோப்புகள், அவர்களின் சம்பள பதிவேடு,

வருகை பதிவேடுகள் ஆகியவற்றை கேட்டு கடிதம் அனுப்பினேன். அதன் பிறகு எனக்கு பணிமாறுதல் ஏற்பட்டதால் வழக்கு கோப்புகளை உதவி ஆய்வாளரிடம் ஒப்படைத்துவிட்டு சென்றேன்.

**1ம் எதிரி தரப்பு குறுக்கு விசாரணை -**

நான் எந்தெந்த சாட்சிகளை விசாரித்தேன் என்றால் அசா 1, அசா 4, அசா 6, சந்திரகுமார் மற்றும் சிகாமணி ஆகியோர்களை விசாரித்தேன். அசா 1 ன் வாக்குமூலம் தாக்கல் செய்யப்பட்டுள்ளதா என்றால் இல்லை. அசா 4, அசா 6 ன் வாக்குமூலங்களை தாக்கல் செய்துள்ளேனா என்றால் செய்துள்ளேன். அது தற்போது நீதிமன்றத்தில் தாக்கல் ஆகவில்லை என்றால் அந்த விவரம் தெரியாது. நான் விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். நான் அசா 2 முதல் 4 ன் வாக்குமூலங்கள் தான் உள்ளது என்றாலும் மற்றவர்களை விசாரித்து வாக்குமூலங்களை பதிவு செய்ததற்கான ஆவணங்கள் இல்லை என்றால் சரியல்ல.

இந்த வழக்கில் சம்மந்தப்பட்ட இடம் அரசு சாலை பொது வழி என்பதற்கு ஆவணங்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளதா என்றால் இல்லை. வரைபடம் தயார் செய்தேனா என்றால் இல்லை. நான் சம்பவயிடம் சென்று சாட்சிகளை விசாரித்து, பார்வை மகசர் தயார் செய்தேன் என்று கூறுவது உண்மைக்கு புறம்பானது என்றால் சரியல்ல. எனது போலிஸ் விசாரணையில் ஆவண எண்.1196–1999 என்பதை நான் என்னுடைய விசாரணையின் போது பெற்றேனா என்றால் பெற்றேன். அது தற்போது நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளதா என்றால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அந்த ஆவணமானது 1ம் எதிரி நடராஜனுக்கு அவரது தாயார் எழுதி வைத்த தான செட்டில்மெண்ட் பத்திரம் என்றால் சரிதான். மேற்படி செட்டில்மெண்ட் ஆவணத்தில் 1433 சதுரடி கொண்ட மனை எண்.28 அடங்கியுள்ளது என்றால் சரிதான். மேற்படி தான செட்டில்மெண்ட் பத்திரத்தை எழுதிவைத்த ராஜேஸ்வரி அம்மாளுக்கு அதில் கண்டுள்ள சொத்துக்கள் அவரின் கணவர் மூலம் கிடைக்கப்பெற்றது என்றால் சரிதான். அவரது கணவர் அந்த சொத்தை 27.04.1981 தேதியிட்ட

கிரைய பத்திரம் முன்னிலைக்கு Commercial Printing Employees Co-operative Industrial Housing Society யிடமிருந்து ஒதுக்கப்பட்டது என்றால் சரிதான்.

மேற்படி அந்த Commercial Printing Employees Co-operative Industrial Housing Society யானது அந்த சொத்தை 27.07.1961 தேதியிட்ட கிரைய பத்திரம் முன்னிலைக்கு கிரையம் பெறப்பட்டது என்றால் சரிதான். எனது விசாரணையில் மேற்படி சொத்து விவசாய நிலமாக இருந்து கிணறு, பம்புசெட் ஆகியவை இருந்ததை தெரிந்து கொண்டேனா என்றால் இல்லை. இந்த வழக்கில் சம்பவயிடம் செல்லாமல், சாட்சிகளை விசாரிக்காமல், விசாரிக்காத சாட்சிகளுக்கு வாக்குமூலம் பதிவு செய்ததாக கூறுவதும் பொய் என்றால் சரியல்ல. உயர் அதிகாரிகளுக்கு பவ்யபட்டு இந்த வழக்கில் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. இந்த வழக்கிற்கும் எதிரிகளுக்கும் எவ்வித சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

**2ம் எதிரி தரப்பு குறுக்கு விசாரணை –**

எனக்கு இந்த வழக்கின் புகாரானது காவல் துறை ஆணையரிடமிருந்து தபால் மூலம் பெறப்பட்டது என்றால் சரிதான். 07.09.2015 அன்று முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டது என்றால் சரிதான். எனக்கு கிடைக்க பெற்ற புகாருடன் போலியான பட்டா என்று கூறும் அதன் தொடர்புடைய ஆவணங்கள் எதுவும் அனுப்பப்படவில்லை என்றால் சரிதான். புகார்தாரரையும் அன்றைய தினம் நான் பார்க்கவில்லை என்றால் சரிதான். நான் தாம்பரம் சார்பு நீதிமன்றத்தில் உள்ள அசல் ஆவணங்களை சென்னை உயர்நீதிமன்றத்தின் உத்தரவின் பேரிலும், என்னுடைய உயர் அதிகாரியின் உத்தரவின் பேரிலும் மேற்படி ஆவணங்களை கேட்டு கடிதம் அனுப்பினேன் என்றால் சரிதான்.

18.03.2016 தேதியிட்ட சிஎம்பி 5537-2016 எஸ்ஏ 479-2012 உத்தரவில் தாம்பரம் சார்பு நீதிமன்றத்திற்கு இந்த வழக்கு சம்மந்தப்பட்ட பட்டா போலியானது என்று கூறப்படும் பட்டா, தாம்பரம் சார்பு நீதிமன்றத்தில் தாக்கல் செய்ப்பபட்ட பிராது, எதிர் வழக்குரை ஆகியவற்றை வழங்குமாறும் இந்த குற்ற வழக்கில் சீரிய புலன் விசாரணை மேற்கொள்ள வேண்டும் என்று உத்தரவிடப்பட்டுள்ளது

என்றால் அந்த சமயத்தில் நான் பணி மாறுதலில் சென்றுவிட்டேன். நான் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த 07.09.2015 லிருந்து 18.03.2016 வரை இந்த வழக்கு சம்மந்தமான அசல் ஆவணங்களை நான் பார்க்கவில்லை என்றால் சரிதான். நான் சென்னை உயர்நீதிமன்றத்தின் பேரில் முதல் விசாரணை பதிவு செய்தேன் என்று கூறியுள்ளேன் என்ற நிலையில் அதை 2433 சதுரடிக்கு வழங்கப்பட்ட போலியான பட்டாவிற்கு விசாணை செய்யவேண்டுமென குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் தற்போது நினைவில்லை.

தாம்பரம் உரிமையியல் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ள அசல் வழக்கு எண்.20–2012 ல் வருவாய் அலுவலர்களை எதிர் மனுதாரர்களாகவோ, அல்லது சாட்சிகளாகவோ இந்த வழக்கில் உள்ள 1ம் எதிரியால் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். மேற்படி 2ம் மேல்முறையீட்டின் தீர்ப்பில் வருவாய் அலுவலர்கள் தான் போலியாக பட்டாவை தயார் செய்துள்ளனர் என்று முடிவு காணவில்லை என்றால் சரிதான். எந்தவிதமான ஆவணங்களையும் பரிசீலிக்காமல் சாட்சிகளையும் விசாரிக்காமல் இந்த வழக்கை பதிவு செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் பதிவு செய்த முதல் தகவல் அறிக்கையிலும் எதிரிகள் 2, 3 நபர்களின் பெயர்கள் குறிப்பிடவில்லையென்றால் சரிதான். இந்த வழக்கை பொறுத்தவரை எந்தவித புலன் விசாரணையும் மேற்கொள்ளவில்லை என்றால் சரியல்ல. வழக்கிற்காக பொய்யான சங்கதிகளை விசாரணையின் போது குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை–** இல்லை.

Sd.xxx

Typewritten to my dictation in open court read over to the witness in Tamil in the presence of the accused and admitted by the witness to be correct.

Sd.R.Reena,
Judicial Magistrate No.I,
Chengalpattu.